MAALAI MALAR

12 MAR 2023

PAGE 3



மத்திய அரசு நிறுவனத்துடன் புதுவை பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்ட காட்சி.

# மத்திய அரசு நிறுவனத்துடன் புதுவை பல்கலைக்கழகம் ஒப்பந்தம்

புதுச்சேரி, மார்ச்.12— மத்திய தகவல் பாதுகாப்புத் துறையின் மின்னணு பரிவர்த்தனைகள் மற்றும் பாதுகாப்புக்கான சமூகமான எஸ்.இ.டி.எஸ்.சுடன் புதுவை பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நிறைவேற்றி உள்ளது.

புதுவை பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பேராசிரியர் ரஜீஷ் பூடானி, எஸ்.இ.டி.எஸ். நிர்வாக இயக்குனர் சுப்ரமணியன் ஆகியோர் கையெழுத்திட்டனர். இயக்குநர் தரணிக்கரசு மற்றும் புல முதன்மையர் சுப்பிரமணியம் ராஜு ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

பாதுகாப்பிற்கான சமூகத்தைசேர்ந்தவிஞ்ஞானிகள் சுப்ரமணியன், பிரேம் லக்ஷ்மன் தாஸ், நடராஜன், ரேஷ்மி —திருப்பதி மற்றும் புதுவை பல்கலைக்கழக புல முதன்மையர்கள், துறை தலைவர்கள், பேராசிரியர்கள், அலுவலர்கள், பணியாளர்கள், அறிஞர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

### கூட்டு ஆராய்ச்சி திட்டங்கள்

ஒப்பந்தம் பாதுகாப்பு விஞ்ஞானிகள் மற்றும் புதுவை பல்கலைக்கழக ஆசிரியர்கள், அறிஞர்கள் மற்றும் மாணவர்கள் இடையே குவாண்டம் பாதுகாப்பு உள்ளிட்ட தகவல் பாதுகாப்பின் வளர்ச்சியடைந்து வரும் தொழில்நுட்பப் பகுதிகளில் கூட்டு ஆராய்ச்சித் திட்டங்கள் அதனை சார்ந்த கல்விப் படிப்புகளில் வேலை.

திறன் மேம்பாடு, ஆலோசனை சேவைகள், கார்ப்பரேட் பயிற்சியை அரசு நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் பிற பொது அல்லது தனியார் துறை நிறுவனங்களுக்கு தகவல் பாதுகாப்புத் துறைகளில் வழங்குவதில் இணைந்து பணியாற்றுவது. கூட்டு நிகழ்வுகள், பட்டறைகள், பயிற்சி திட்டங்களை நடத்துதல் ஆகியவற்றை செயல்படுத்தும்.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை புதுவை பல்கலைக்கழகத்தின் பொறியியல் மற்றும் தொழில்நுட்பப் பள்ளியின் பேராசிரியர் சித்ரலேகா ஒருங்கிணைத்தார். புதுவை பல்கலைக்கழக கணினி அறிவியல் துறைத் தலைவர்

THE HINDU TAMIL

12 MAR 2023

PAGE 4

புதுவை மத்திய பல்கலைக்கழக சமுதாய கல்லூரியில்

# மாணவர்களுக்கு புகைப்படம், ஒளிப்பதிவு நுட்ப பயிற்சி

**ராஜீவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனம் இணைந்து நடத்தியது**

● புதுச்சேரி

புதுவை மத்திய பல்கலைக்கழக சமுதாய கல்லூரியின் காட்சி தொடர்பியல் துறையும் ராஜீவ் காந்தி தேசிய இளைஞர் மேம் பாட்டு நிறுவனமும் இணைந்து இளைஞர்கள் மாணவர்கள், நாட்டு நலப்பணி திட்ட மாணவர்கள், எஸ்.சி,எஸ்.டி மாணவர்களுக்காக, 'தொழில் முறை புகைப்படம் எடுத்தல் மற்றும் ஒளிப்பதிவு - நுட்பங்கள் மற்றும் வாய்ப்புகள்' என்ற தலைப்பில் 3 நாள் இலவச பயிற்சி பட்டறையை நடத்தியது.

வனவிலங்கு புகைப்பட கலை ஞர் ராதிகா ராமசாமி இந்நிகழ்வை தொடக்கி வைத்து பேசுகையில், "வனவிலங்கு புகைப்படம் என்பது வெறும் புகைப்படம் எடுப்பது என்பது மட்டுமன்றி, அதன்மூலம் விலங்குகளின் வாழ்வியலை புரிந்து கொண்டு அதனை பேணிப் பாதுகாப்பதாகவும் இருக்க வேண்டும். இத்துறையை தேர்வு செய்யும் போது எதிர்கொண்ட அனுபவங்கள் எனக்கு மிகவும் கைகொடுத்தது. விருப்பமே இத்துறையின் சாதனைக்கு முக்கியம்" என்றார்.



குறும்பட மற்றும் ஆவண பட இயக்குநர் சிவகுமார், பல சர்வ தேச விருதுகளை தன் புகை படங்களுக்காக பெற்றுள்ள புகைப் பட கலைஞர் செல்வப்ரகாஷ் லக்ஷ் மணன் உள்ளிட்டோர் மாணவர் களுக்கு புகைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சி தயாரித்தல் குறித்த வகுப்புகளை எடுத்தனர். பல துறைகளைச் சேர்ந்த, புகைப்படம் எடுப்பதில் ஆர்வம் உள்ள மாணவர்கள் முன்பதிவு செய்து, இந்த 3 நாள் பயிலரங்கில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்த புதுச்சேரி பல்கலைக் கழக சமுதாயக் கல்லூரி காட்சி தொடர்பியல் துறை உதவி பேராசிரியர் கிருத்திகா கூறுகையில், "ராஜிவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனத்திடம் நிதியுதவி பெற்று நடத்தப்படும் இப்பயிற்சியில, தமிழ்நாடு மற்றும் புதுவையில் உள்ள பல்வேறு கல்லூரிகளில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர். இத்துறையில் செயல்முறை அறிவை இதன்மூலம் பெறுகின்ற னர்.

புகைப்படம் எடுக்க தேவை யான அடிப்படை விஷயங்கள், புகைப்படத்திற்கு தேவையான ஒளியமைப்பு, புனைகதை அல்லாத நிகழ்ச்சிக்கான ஸ்கிரிப்ட் எழுதுதல் முதல் எடிட்டிங் வரை உள்ள விஷயங்களும் கற்பிக்கப்பட்டன. இங்கு மாணவர்களுக்கு அளிக்கப்பட்ட 30 வினாடி விடியோ எடுக்கும் பயிற்சி மாணவர்களின் படைப்புத் திறனுக்கு ஒரு சான்றாக அமைந்தது" என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், பேராசிரியர் லலிதா, ராஜீவ்காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு பயிற்சி மையத் துறைத்தலைவர் வசந்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

THE HINDU

12 MAR 2023

PAGE 3

Sunday, March 12, 2023
CHENNAI

# Workshop on photography held in U.T.

**The Hindu Bureau**
PUDUCHERRY

Over 100 students participated in a three-day workshop on photography and videography organised by the Department of Visual Communication, Pondicherry University Community College and Rajiv Gandhi National Institute for Youth Development, Sriperumbudur, Tamil Nadu. Wildlife photographer Rathika Ramasamy inaugurated the workshop.